**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை– 6**

**ந.க.எண்: 53643/எம்1/இ1/2024 நாள்: 25.06.2025**

**பொருள்:** பள்ளிக் கல்வி – பள்ளி செயல்பாடுகள் – பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள், கருத்து வேறுபாடுகள் அடிப்படையில் வன்முறை உருவாகுவதைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்க்கவும் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு

**பார்வை:**
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6 ந.க.எண். 53643/எம் /இ1 /2023 நாள். 19.01.2024
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்களின் இணைச் செயல்முறைகள் ந.க.எண். 000882/எம்1/இ1/2023, நாள் 26.05.2025
3. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–06, ந.க.எண்.018655 /எம்2/இ1/2025, நாள். 25.04.2025
4. அரசாணை நிலை (1டி) எண் 83 பள்ளிக் கல்வித் துறை நாள் 17.06.2021

-----

பார்வை 2 இல் காண் கடிதத்தில் பள்ளி அளவில் மாணவர்களின் நற்பண்புகள் மற்றும் செயல்பாடுகளை ஆக்கப்பூர்வமாக வழிநடத்திட நன்னெறிக் கல்வி, கல்வி சார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகள் சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள், கருத்து வேறுபாடுகள் அடிப்படையில் வன்முறை உருவாகுவதைத் தவிர்க்கவும், நல்லிணக்கம் மற்றும் நற்பண்புகளை வளர்ப்பது மிக இன்றியமையாதது. எனவே ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் இணைந்து நல்லிணக்கத்தின் இலக்காக சாதி/சமூக வேறுபாடு இல்லாத சமூகத்தை உருவாக்குவதற்கு பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்கள் பின்வருமாறு,

**நன்னெறி வகுப்பு**

தமிழகம் உலகிற்கு தந்த பெருங்கொடையாகவும் உலக மக்கள் அனைவருக்கும் பொதுமறையாகவும் உள்ள திருக்குறள் 6 ஆம் வகுப்பு முதல்

Scanned with OKEN Scanner

12ஆம் வகுப்பு வரை உள்ள தமிழ்பாடநூலில் இன்றியமையாத இடத்தினைப் பெற்று செவ்வனே கற்பிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 51 பள்ளிக் கல்வித் (ERT) துறை நாள் 21.03.2017 இன்படி திருக்குறளில் உள்ள அறத்துப்பால் மற்றும் பொருட்பாவில் உள்ள 105 அதிகாரங்களை உள்ளடக்கி 6 வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு நன்னெறிக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. வாரம் ஒரு நன்னெறி வகுப்பு அனைத்து வகுப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பாட வேளைகளில் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள திருக்குறளினைப் பொருளுடன் ஆசிரியர்கள் கற்பித்தல் வேண்டும். திருக்குறளின் கருத்துக்கள் மாணவர்களின் உள்ளங்களில் ஆழமாக ஊன்றிடவும் நடத்தையில் வெளிப்படுத்திட தக்க வகையில் கதை, கவிதை, நாடகம், வினாடி வினா உள்ளிட்ட செயல்பாடுகள் மூலம் ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் முறைக்கு வலுவூட்ட வேண்டும்.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க் கிழமை அன்று காலை வணக்கக் கூட்டத்தில் திருக்குறள் கருத்துப் பரிமாற்றம் சார்ந்து பேச்சு/கவிதை/சுவரொட்டி/நாடகம்/பாட்டு/கதைகள் இடம் பெறலாம்.

மேலும், இந்நன்னெறி வகுப்புப் பாட வேளையில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வாழ்வியல் திறன் சார்ந்து வழங்கப்படும் பயிற்சிகளையும் வழங்கிடலாம்.

நன்னெறி வகுப்பில் மாணவர்களை குழுவாக செயல்பாடுகள் வழங்கி குறிப்பாக கவனம் தேவைப்படும் மாணவர்கள் பங்கேற்று திறன்களை வெளிப்படுத்த தவறாமல் ஆசிரியர்கள் வாய்ப்பளிக்க வேண்டும்.

அரசுப் பள்ளிகளின் வளர்ச்சிக்கென கற்றல் கற்பித்தல் முறைகளில் நாட்டிற்கே முன்னோடி திட்டங்களான எண்ணும் எழுத்தும், இல்லம் தேடிக்கல்வி, மாதிரிப்பள்ளிகள் போன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கிச் சிறப்பாக அரசு செயல்படுத்திவருகிறது. அதன் தொடர்ச்சியாக, கல்விசார் செயல்பாடுகள் (Co-Curriuclar) மற்றும் கல்விசாராச் செயல்பாடுகளைச் (Extra Curricular) சிறப்பாகச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ளது.

**கல்வி சார் செயல்பாடுகள் (Co-Curriuclar)**

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி சார் செயல்பாடுகளை ஊக்குவிக்க இலக்கியம், கவின்கலை, சூழலியல், இலக்கிய மன்றம், வினாடி வினா, நூலகச் செயல்பாடுகள், வானவில் மன்றம், போதை எதிர்ப்பு மன்றம் உள்ளிட்ட மாணவர் மன்றங்கள் தொடங்கப்பட்டு அனைத்து மாணவர்களும் வேறுபாடின்றி பங்கேற்க செய்தல் வேண்டும்.

Scanned with OKEN Scanner

**கல்விசாராச் செயல்பாடுகள் (Extra Curricular Activities)**

பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடையே கல்வி சாரா செயல்பாடுகளை ஊக்குவிக்க கலையும் கலைவண்ணமும், ஓவியம்–ஒரிகாமி/கைவினை, நாடகம்/கூத்துக்கலை/இசை/வாய்ப்பாட்டு /நடனம்/பாரம்பரியகலை, கலையரங்கம், கலைத் திருவிழா, சிறார் திரைப்படம், கணினி நிரல் மற்றும் எந்திரனியல் மன்றங்கள், சுற்றுச்சூழல் மன்றச் செயல்பாடுகள் உள்ளிட்ட செயல்பாடுகள் உள்ளன. மேற்கூறிய கல்விசாராச் செயல்பாடுகள் தவிர, இளஞ்செஞ்சிலுவை சங்கம், தேசிய மாணவர் படை, நாட்டு நலப்பணி திட்டம், சாரண சாரணியர், செஞ்சுருள் மன்றம் மற்றும் பள்ளி உடல் நல மன்றம் போன்றவற்றிற்கான செயல்பாடுகளிலும் அனைத்து மாணவர்களும் வேறுபாடின்றி பங்கேற்க செய்தல் வேண்டும்.

<u>**வழிகாட்டு நெறிமுறைகள்:**</u>

- அனைத்து பள்ளிகளின் ஆசிரியர்களும் ஊழியர்களும் சமூகப் பிரச்சினைகள், சாதி பாகுபாடு மற்றும் பாலியல் வன்முறை, பாலியல் துன்புறுத்தல், போதைப்பொருள், ராகிங் மற்றும் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பல்வேறு சட்டங்கள் தொடர்பாக தாங்களும் தலைமை ஆசிரியர் நடத்தும் கூட்டத்தில் கலந்தாலோசித்து பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டுதல் பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடல் வேண்டும். அவ்வப்போது பள்ளிக் கல்வி இயக்கத்திலிருந்து வழங்கப்படும் ஆணைகளின் அடிப்படையில் இச்செயல்பாடுகளை நன்கு திட்டமிட்டு செயல்படுத்திட வேண்டும்.
- ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவர்களுக்கான இருக்கை ஒதுக்கீடு உயரத்திற் கேற்பவும் அவ்வப்போது மாற்றி அமைத்து அமரச்செய்தல் வேண்டும். உடல் ஊனமுற்ற மாணவர் மற்றும் கண்பார்வை குறைபாடு உள்ள மாணவர்களை தவிர்த்து பிற மாணவர்களை 15 நாட்களுக்கு ஒரு முறை வரிசையிலும் மாற்றி அமரச் செய்தல் வேண்டும்.
- பள்ளிகளில் மாணவர்களின் சாதிப்பெயர்களை மந்தனமாக வைத்திருக்க வேண்டும்.
- மாணவர்களின் வருகைப் பதிவேட்டில் அவர்களின் சாதி தொடர்பான எந்த நெடுவரிசையோ அல்லது விவரங்களோ இருக்கக்கூடாது.
- எந்த நேரத்திலும் வகுப்பு ஆசிரியர் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அவர்களின் சாதியைக் குறிப்பிட்டு மாணவர்களை அழைக்கவோ, மாணவரின் சாதி அல்லது சாதிக்குக் காரணமான தன்மை பற்றி எந்த இழிவான கருத்துக்களையும் தெரிவிக்கவோ கூடாது.

Scanned with OKEN Scanner

- எந்தவொரு மாணவரின் உதவித் தொகை தொடர்பாக பெறப்பட்ட தகவல் தொடர்புகளின் விவரங்களை அறிவிப்பதற்கான இடம் வகுப்பறைகள் அல்ல. அத்தகைய தகவல் தொடர்புகள் பெறப்பட்டால், தலைமை ஆசிரியர் மற்றும் வகுப்பு ஆசிரியர் மாணவர்களை தனியே அழைக்காமல் குழுவாக அழைத்து தகவலை வாய் மொழியாகவோ அல்லது எழுத்து புர்வமாகவோ வழங்க வேண்டும். இந்நேர்வுகளில் பெற்றோர்களுக்கு குறுச்செய்தி அலைபேசி வாயிலாக அனுப்பிடவும் தெரிவிக்கப்படுகிறது.
- பள்ளியில் மாணவரின் தனிப்பட்ட விவரங்கள் ஒரு பதிவு கோப்பாகப் பராமரிக்கும் நிலையில் தலைமை ஆசிரியர் அனுமதியுடன் மட்டுமே அக்கோப்பினை பயன்படுத்திட வகுப்பாசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தலைமை ஆசிரியரால் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டும்.
- மாணவர்கள் வண்ண மணிக்கட்டுபட்டைகள், மோதிரங்கள் அல்லது வேறுபாடுகளை வெளிப்படையாக தெரியக்கூடிய அடையாளங்கள் அணிவதைத் தடைசெய்வதோடு அவற்றை அணிவதைத் தடுப்பதற்கான ஆலோசனைகள் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அவ்வப்போது வழங்கிட தெரிவிக்கப்படுகிறது.
- மாணவர்கள் தங்கள் சாதியைக் குறிப்பிடும் அல்லது சாதி தொடர்பான உணர்வுகளை வெளிப்படுத்தும் மிதிவண்டிகளில் பள்ளிக்கு வருவதையும் தவிர்க்க வேண்டும். இந்த விதிகளைப் பின்பற்றத் தவறினால், அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுக்கு அறிவுறுத்துவதோடு கூடுதலாக, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.
- சாதி ரீதியாக உணர்வுகளை வெளிப்படுத்தும் மற்றும் அணுகக் கூடிய மாணவர்களுக்கு தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தக்க வழிக்காட்டுதல்கள் மற்றும் ஆலோசனைகள் வழங்கிடல் வேண்டும்..
- பள்ளி வளாகங்களில் மாணவர்கள் அலைபேசி பயன்படுத்துவதை தடை செய்வது கட்டாயமாக்கப்பட வேண்டும்.
- அனைத்து வகையான பள்ளிகளிலும் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களுக்கும் நன்நெறி வகுப்புகள் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும்.
- சுழற்சி முறையில் இந்த நன்நெறி விரிவுரையை வழங்க ஒரு தகுதி வாய்ந்த ஆசிரியரை நியமிக்க வேண்டும். கூடுதலாக, இந்த விரிவுரைகளில் பங்களிக்க நன்கு தகுதி வாய்ந்த வெளிநபர்களையும் அழைக்கலாம்.
- எந்தவொரு மாணவரும் போதைப்பழக்கத்தால் பாதிக்கப்பட்டால், அந்த மாணவரை போதை மறுவாழ்வு மையத்தில் சேர்க்க தலைமையாசிரியர்,

Scanned with OKEN Scanner

பெற்றோர் மற்றும் பாதுகாவலருக்கு பரிந்துரைத்து மற்றும் சார்ந்த வகுப்பாசிரியர் மாணவரின் முன்னேற்றத்தை கண்காணித்தல் வேண்டும்.

- மாணவர்களுக்கு பள்ளி அளவில் ஆசிரிய வழிகாட்டி (Teacher Counsellorr) ஒருவரை நியமித்தல் வேண்டும். மாணவியருக்கென கட்டாயமாக பெண் ஆசிரியர் ஒருவரை நியமித்தல் வேண்டும். ஆண் மாணவர்களுக்கு பெண் அல்லது ஆண் ஆசிரியரை நியமிக்கலாம்.இவ்வாசிரிய வழிகாட்டி இப்பள்ளியில் பள்ளி நல ஆலுவலராக (School Welfare Officer– SWO) செயல்படுவார். 500 க்கும் அதிகமாக மாணவர்கள் இருப்பின் கூடுதலாக ஆசிரிய வழிகாட்டியை தலைமை ஆசிரியர் நியமித்துக் கொள்ளலாம்.
- ராகிங், போதைப் பொருள் அச்சுறுத்தல், பாலியல் வன்கொடுமை மற்றும் சாதி பாகுபாடு, கருத்து வேறுபாடு தொடர்பான தவறுகள்/குற்றச் செயல்பாடுகள் தொடர்பாக மாணவர்களின் செயல்பாடை கண்காணித்து பல்வேறு கல்வி சார் மற்றும் கல்வி சாரா செயல்பாடுகளின் பொறுப்பு ஆசிரியர்கள்/வகுப்பு ஆசிரியர் ஆகியோர் ஒருங்கிணைந்து விவரங்களை ஆய்வு செய்து பள்ளித் தலைமை ஆசிரியருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்நிகழ்வுகள் சார்ந்து மாணவர் பாதுகாப்பு ஆலோசனை குழு (Student Safeguarding Advisory Committee) பள்ளி அளவிலான குழுவில்
    - தலைமை ஆசிரியர்
    - ஆசிரியர்கள் – 2
    - பெற்றோர் ஆசிரியர் கழகம் / பெற்றோர் உறுப்பினர் – 2
    - பள்ளி மேலாண்மைக் குழு பிரதிநிதி – 1
    - ஆசிரியரல்லா பணியாளர் – 1
    - வெளி நபர் (தேவை எனில்) – 1

- பள்ளிகளில், மேலும் அதிக அளவில் விழிப்புணர்வு பதாகைகள் முக்கியமான இடங்களில் வைக்கப்பட வேண்டும். இப்பதாகைகளில் Child Helpline 1098 மற்றும் பள்ளிக்கல்வித்துறை உதவி எண் 14417 ஆகிய உதவி எண்கள் குழந்தைகள் எளிதில் படிக்கும் வண்ணம் பெரிய எழுத்துகளில் பொறிக்கப்பட வேண்டும்.
- மாணவர்களிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகள், சச்சரவுகள் மற்றும் பாலியல் குற்றங்கள் பற்றி குழந்தைகள் புகார் அளித்தாலோ அல்லது பாலியல் குற்றங்கள் பற்றி தெரிய வந்தாலோ, அப்பள்ளியின் தலைமை ஆசிரியர்/ஆசிரியர்கள் உடனடியாக காவல் துறைக்கு புகார் அளிக்க வேண்டும். அவ்வாறு புகார் அளித்தவுடன், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலருக்கு அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டும்."மாணவர் மனசு"

Scanned with OKEN Scanner

புகார் பெட்டி அனைத்துப் பள்ளிகளிலும் நிறுவப்பட்டு, அது தினசரி பயன்பாட்டில் இருப்பது உறுதி செய்யப்பட வேண்டும். புகார் பெட்டியில் புகாரளிக்கும் குழந்தைகளின் விவரங்கள் வெளிவரக்கூடாது என்பது முக்கியமாகையால், அப்பகுதியில் கண்காணிப்புக் கேமராக்கள் எக்காரணத்தை முன்னிட்டும் பொருத்தப்படக் கூடாது.

- அனைத்து திங்கட்கிழமைகளிலும், காலையில் பள்ளியில் நடக்கும் அனைத்து காலை வணக்கக் கூட்டங்களில் தலைமை ஆசிரியரும், ஏனைய ஆசிரியர்களும் கலந்து கொள்ள வேண்டும். அதில் சில நிமிடங்கள் குழந்தைகள் பாதுகாப்பு "மாணவர் மனசு" புகார் பெட்டி மற்றும் குழந்தை பாலியல் வன்கொடுமை மற்றும் கருத்து வேறுபாடு, சச்சரவுகள் பற்றி புகார் அளிக்கும் முறை, குழந்தைகள் பாதுகாப்பில் பள்ளி நிர்வாகம் எடுத்துள்ள நடவடிக்கைகள் ஆகியவை குழந்தைகள் நன்கு அறியும் வண்ணம் எடுத்துரைக்கப்பட வேண்டும்.

- CCTV கண்காணிப்புக் கேமராக்கள் அனைத்துப் பள்ளிகளிலும் குறிப்பாக பள்ளி மாணவ/மாணவிகள் செல்லும் அறைகள், விளையாட்டு மைதானம், வகுப்பறை முகப்பு, உள்ளே வருவது மற்றும் வெளியே செல்வதற்கான வழிகள் மற்றும் பள்ளி வளாகங்களுக்குள் உபயோகிக்கப்படாமல் இருக்கும் இடங்களிலும் அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- பள்ளித் தலைமையாசிரியர் அல்லது ஏதேனும் ஒரு குழு பொறுப்பு ஆசிரியர் (House head teacher) "மாணவர் மனசு" திட்டம் சார்ந்து விளக்க உரை காலை வணக்கக் கூட்டத்தில் இடம் பெற வேண்டும்.
- ஒவ்வொரு கல்வியாண்டின் தொடக்கத்திலும் மேற்கூறிய பிரச்சினைகள் குறித்து வழிகாட்டுதல் திட்டங்களை நடத்துவதற்கு SWOக்கள் பொறுப்பேற்க வேண்டும், மேலும் இது தொடர்பாக பள்ளியின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.
- மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவிடம் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாதந்தோறும் அறிக்கை அளிக்க வேண்டும்.
- ஆசிரியர்கள் மற்றும் பிறஊழியர்கள் சாதி பாகுபாடு மற்றும் அவர்கள் ஈடுபடக்கூடிய பிறநியாயமற்ற நடைமுறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க SWO பரிந்துரைக்கலாம்.
- பல குறைதீர்க்கும் பெட்டிகளை வைத்திருப்பதற்குப் பதிலாக, ஒரு பிரத்யேக குறைதீர்க்கும் பெட்டி (மாணவர்மனசு) நிறுவப்பட வேண்டும்,

Scanned with OKEN Scanner

மேலும் சாவியை நியமிக்கப்படும் பள்ளிநல அதிகாரியிடம் (SWO) வைத்திருக்க வேண்டும்.

- குறைதீர்க்கும் பெட்டி வாரத்திற்கு ஒரு முறையாவது (அடிக்கடி இல்லாவிட்டாலும்)திறக்கப்பட வேண்டும், மேலும் எழுப்பப்படும் குறைகள் எந்த தாமதமும் இல்லாமல், இவ்விவரம் சார்ந்த மனுதாரருக்கு உரிய முறையில் சென்றடையும் வகையில் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும்.
- மாணவரின் அடையாளம் ரகசியமாக வைக்கப்பட வேண்டும்; எந்த சூழ்நிலையிலும் மாணவர் எந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அனுபவிக்கக் கூடாது.

**"மகிழ் முற்றம்" – மாணவர் குழு – கட்டமைப்பு :**

பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஐந்து குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளார்கள்

| குழுக்களின் பெயர்கள் : | குழுக்களின் நிறங்கள் |
|---|---|
| ❖ குறிஞ்சி | சிவப்பு |
| ❖ முல்லை | மஞ்சள் |
| ❖ மருதம் | பச்சை |
| ❖ நெய்தல் | நீலம் |
| ❖ பாலை | வெள்ளை |

இக்குழு அமைப்பில் 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களும் இடம் பெற்றுள்ளார்கள். இக்குழுத் தலைவர்களில் உள்ள மாணவ/மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சமூக நீதி சார்ந்த கருத்துக்களை மாணவர்களிடையே வலுப்படுத்தி வேற்றுமை இன்றி செயல்பட தேவையான அனைத்து ஒருங்கிணைப்பையும் பள்ளி அளவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளிலும் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

- பள்ளிகளில் உள்ள மகிழ் முற்ற குழுக்களில் மாணவர் குழுத் தலைவர்கள் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைத்து செயல்பாடுகளிலும் சமூக நீதி பண்புகளை வளர்க்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும்.
- பள்ளி சொத்துக்களை கல்விசாராத நோக்கங்களுக்காகப் பயன்படுத்த கூடாது. இதில் கலையரங்கங்கள், வகுப்பறைகள், விளையாட்டு மைதானங்கள் அல்லது திறந்த வெளியில் மாணவர்களை ஒருமைப்படுத்தி

Scanned with OKEN Scanner

நடத்தப்படும் ஒத்திகை பயிற்சிகள், அணி வகுப்புகள் அல்லது வகுப்புவாத அல்லது சாதிதொடர்பான செய்திகளைப் பரப்புதல் போன்ற செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தகூடாது.

## விளையாட்டு

அனைத்து வகுப்புகளிலும் விளையாட்டு பாட வேளைகளில் கட்டாயம் மாணவர்கள் விளையாட்டு பயிற்சி ஈடுபடுவதை தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உறுதி செய்தல் வேண்டும். குழு விளையாட்டுக்கள் மூலம் மாணவர்களிடையே வேறுபாடுகளை களையலாம் எனவே பள்ளித் தலைமை ஆசிரியர்கள் குழு விளையாட்டுப் போட்டிகளை பள்ளிகளுக்கு ஏற்றவாறு தெரிவு செய்து விளையாடிட வாய்ப்பு அளித்தல் வேண்டும்

## சமூக ஊடகங்கள் பயன்பாடு

மாணவர்கள் சமூக ஊடகங்களில் வெளிவரும் போலிச் செய்திகள் குறிப்பாக சாதி மற்றும் கருத்து வேறுபாடு சார்ந்து வரும் தகவல்களை சரிபார்த்து உண்மை தகவலை தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் மற்றும் வழிமுறைகள் சார்ந்து காலை வணக்கக் கூட்டத்தில் தகவல்களை ஆசிரியர்கள் பகிரலாம். மாணவர்களுக்கு தங்களது அடையாளம் மந்தனமாக காக்கப்பட வேண்டும் எனில் மாணவர் மனசு பெட்டிகளில் இத்தகவல்களை தெரிவித்து வழிகாட்டி ஆசிரியர்களுடன் தெளிவு பெறலாம். தெரியாத நபர்கள் மற்றும் புதிய நபர்களிடம் பழகும் போது எச்சரிக்கையாக இருக்கவும், அறிமுகம் இல்லாதவர்களால் அனுப்பப்படும் இணைப்புகளை திறப்பதை தவிர்க்கவும், சந்தேகத்திற்கிடமான தகவல்களை நம்பவேண்டாம் என்பதை மாணவர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும், மாணவர்கள் சமூக ஊடகங்களில் பதிவிடும் தகவல்கள் மற்றும் கருத்துக்களை கவனமாக பதிவிடவும், யாரையும் புண்படுத்தும் அல்லது அவதூறான கருத்துக்களை பகிர்வதை தவிர்த்தல் வேண்டும்.

தவறான தகவல்களை பிறருக்கு பகிரக்கூடாது என்பதை தெரியப்படுத்த வேண்டும், ஏனெனில் இத்தகைய தகவல்கள் பிறருக்கு தீங்கு விளைவிக்கக்கூடும். மேலும் சமூக ஊடகங்களை நேர்மறையான வழியில் பயன்படுத்த வேண்டும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். சமூக ஊடகங்களை பயன்படுத்தும் போது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு டிஜிட்டல் தடம் பதிவாகிறது. எனவே, மாணவர்கள் பதிவிடும் தகவல்களை பிறரை பாதிக்கக்கூடியதாக அல்லது தவறாக வழிநடத்துவதாக அமையக்கூடாது என்ற விவரத்தினை பெற்றோர் கூட்டங்கள் நடத்தும் போது தெளிவாக எடுத்துரைத்தல்

Scanned with OKEN Scanner

வேண்டும். மாணவர்கள் தங்களுக்கு ஏதேனும் மனதளவில் பாதிப்பு அல்லது பாதுகாப்பான செயல்பாடுகள் சார்ந்து தெளிவு தேவையெனில் மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கட்டணமில்லா தொலைபேசி எண்களை 14416 மற்றும் 104 பயன்படுத்தி மருத்துவ ஆலோசனைகள் பெற்றக்கொள்ளலாம். மேற்கண்ட தொலைபேசி எண்களில் மருத்துவர்கள் மற்றும் மனநல ஆலோசகர்கள் வழிகாட்டுதல்கள் வழங்குவார்கள்.

**கண்காணிப்பு குழு**

- மாணவர்களிடையே சாதிபாகுபாடு பிரச்சனைகளை தீர்க்க முதன்மைக் கல்வி அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நல அலுவலர், மாவட்ட கல்வி அலுவலர்கள், காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்த மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு அமைத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் "உரிமை முற்றம் என்ற அமைப்பை ஏற்படுத்தி முதன்மைக் கல்வி அலுவலர்கள் பள்ளி மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக வேறுபாடு உணர்வுகள், கருத்து வேறுபாடுகள் அடிப்படையில் வன்முறை ஏற்படும் நிகழ்வுகள் பாலியல் வன்கொடுமை, விபத்துக்கள், உள்ளிட்டவற்றை கண்காணிக்க வேண்டும். இவ்உரிமை முற்றத்தில் பின்வரும் அலுவலர்கள் முதன்மைக் கல்வி அலுவலகத்தில் உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும்.
    1. நேர்முக உதவியாளர் (மேல்நிலை)
    2. சுற்றுசூழல் ஒருங்கிணைப்பாளர்
    3. பள்ளித் துணை ஆய்வர் (முதன்மை கல்வி அலுவலரால் பணி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்)
- மேலும் இக்கண்காணிப்பு குழு ஒவ்வொரு மாதமும் பள்ளி தலைமை ஆசிரியரிடமிருந்து அறிக்கைகள் பெற்று உரிய தொடர் நடவடிக்கை எடுத்தலை கண்காணித்தல் வேண்டும்.
- அரசாணை 112 பள்ளிக் கல்வித் 5(1) துறை நாள் 15.05.2025 மூலம் அரசுப் பள்ளிகளில் பயின்று சாதனை புரிந்த மாணவர்களை அவர்கள் பயின்ற பள்ளியின் தூதுவர்களாக (School Ambassadors) நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்படஉள்ள பள்ளித் தூதுவர்களும் மாணவர்களிடையே ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளை மற்றும் வன்முறை எண்ணங்களை நீக்குவதற்காக தேவைப்படும் நடவடிக்கையை ஒருங்கிணைத்து செயல்பட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

Scanned with OKEN Scanner

மேற்கண்ட அறிவுரைகளைபின்பற்றி, மாணவர்களிடையே சாதி மற்றும் சமூக அடிப்படையில் எழும் வன்முறைகளை தவிர்த்து, நல்லிணக்கத்தை உருவாக்கி ஆரோக்கியமான சமுதாயம் உருவாக்கிட அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது. இச்செயல்முறைகளை அனைத்து வகை பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அனுப்பிடவும் தலைமை ஆசிரியர் கூட்டத்தில் இப்பொருள் சார்ந்து விவாதித்திடவும் நடவடிக்கை எடுத்திட தெரிவிக்கப்படுகின்றது. மாவட்ட அளவிலான அலுவலர்கள் பள்ளிகளை பார்வையிடும் போது இப்பொருள் சார்ந்து ஆய்வு செய்து அறிக்கையினை முதன்மைக் கல்வி அலுவலருக்கு அளித்திடல் வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகின்றது.

இயக்குநர்

சிஇசா
25.06.25

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
முதன்மைக் கல்வி அலுவலகம்,
அனைத்து மாவட்டங்கள்.

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, தலைமைச் செயலகம், சென்னை–09.
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–06.
3. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–06.
4. உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை–06.
5. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–06.
6. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை –06
7. இயக்குநர், தனியார் பள்ளிகள் இயக்ககம், சென்னை–06
8. இயக்குநர், அரசு தேர்வுகள் இயக்கம், சென்னை–06

Scanned with OKEN Scanner